செய்தி வெளியீடு எண்:545 நாள்:23.11.2016

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.இரா.காமராஜ் அவர்கள் தலைமையில், இன்று (23.11.2016) சென்னை தலைமை செயலகத்தில், பொது விநியோகத் திட்ட செயல்பாடுகள் குறித்த கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது.

புழக்கத்தில் உள்ள குடும்ப அட்டைகளுக்கு பதிலாக, புதிய மின்னணு குடும்ப அட்டைகள் வழங்க எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளை விரைவுபடுத்த வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அலுவலர்களை கேட்டுக்கொண்டார்.

புதிய குடும்ப அட்டை வேண்டி உரிய ஆதாரங்களுடன் விண்ணப்பிக்கும் மனுதாரர்களுக்கு 60 நாட்களுக்குள் குடும்ப அட்டை வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 17 இலட்சத்து 66 ஆயிரத்து 463 குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், வழங்குவதற்கு தயாராக உள்ள 23 ஆயிரத்து 860 குடும்ப அட்டைகளை பெற்றுக்கொள்ளுமாறு மனுதாரர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு வருகிறது. இன்றுவரை, 5 இலட்சத்து 19 ஆயிரத்து 912 போலி குடும்ப அட்டைகள் கண்டறியப்பட்டு நீக்கம் செய்யப்பட்டுள்ளன.

உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை மூலமாக ஒவ்வொரு மாதமும், இரண்டாம் சனிக்கிழமையன்று நடத்தப்படும் குறைதீர் முகாம்களில், இன்று வரை, 5 இலட்சத்து 56 ஆயிரத்து 948 மனுக்கள் பெறப்பட்டு, 5 இலட்சத்து 35 ஆயிரத்து 972 மனுக்கள் மீது அன்றைய தினமே தீர்வு காணப்பட்டுள்ளது.

தற்போது 75 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதுவரை நடப்பு பருவத்தில் 11 ஆயிரத்து 946 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. சன்ன ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு

ஊக்கத்தொகையாக ரூபாய் 70ம், சாதா ரக நெல்லுக்கு ரூபாய் 50ம் என நிர்ணயம் செய்து சன்ன ரக நெல் குவிண்டால் ரூபாய் 1580க்கும், சாதா ரக நெல் ரூபாய் 1520க்கும் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

கடந்த 5 ஆண்டுகளுக்கும் மேலாக, உணவு பொருள் கடத்தல் தடுப்பு காவல் துறையினரால் எடுக்கப்பட்டு வரும் கடுமையான தொடர் நடவடிக்கைகளால் இதுவரை 930 நபர்கள் தடுப்புக்காவல் சட்டத்தின் (BM ACT) கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் சிறப்பாக செயல்பட்டுவரும் விலையில்லா அரிசி திட்டத்திற்கு 3 மாதத்திற்கு தேவையான அரிசி கையிருப்பில் உள்ளது என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சர்க்கரை, கோதுமை, பருப்பு மற்றும் பாமாயில் முதலியன கொள்முதல் செய்யப்பட்டு கடைகளுக்கு உடனுக்குடன் நகர்வு செய்யப்பட்டு வருகின்றன என்றும் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலாளர் திரு.பிரதீப் யாதவ், இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் / முதன்மைச் செயலாளர் Dr.கே.கோபால்,இ.ஆ.ப., உணவு பொருள் குற்றப்புலனாய்வுத் துறை இயக்குநர் திரு.கே.இராதாகிருஷ்ணன்,இ.கா.ப., உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் திருமதி.எஸ்.மதுமதி, இ.ஆ.ப., மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**

.